# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

## *2011 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க, இலங்கை பொருளியற் கழகம் (கூட்டிணைத்தல்) சட்டம்*

---

*(2011 ஆம் ஆண்டு யூலை மாதம் 19 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது)*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது*

---

*2011, யூலை மாதம் 22 ஆம் திகதிய* **இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின்** II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது.

*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது*

கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

***விலை : ரூபா 11.25*** ***தபாற் செலவு : ரூபா 10.00***

## 2011 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க, இலங்கை பொருளியற் கழகம் (கூட்டிணைத்தல்) சட்டம்

[2011 ஆம் ஆண்டு யூலை மாதம் 19 ஆம் திகதி அத்தாட்சிப் படுத்தப்பட்டது.]

ச.வ.ஓ. கூட். 14/2009

### இலங்கை பொருளியற் கழகத்தைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டம்

முன்னுரை.

“இலங்கை பொருளியற் கழகம்” என அழைக்கப்படுவதும், அறியப்படுவதுமான கழகமொன்று அதன் உறுப்பினர்களால் இணங்கிக்கொள்ளப்பட்ட விதிகளுக்கிணங்கச் சொல்லப்பட்ட கழகத்துடன் தொடர்புபட்ட எல்லாக் குறிக்கோள்களையும் கருமங்களையும் பயனுற நிறைவேற்றிக் கொண்டுநடாத்தும் நோக்கத்துக்காக 1982 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க, கம்பெனிகள் சட்டத்தின்கீழ் வரையறுக்கப்பட்ட பொறுப்புக் கம்பெனியொன்றாக இதற்குமுன்னர் அமைக்கப்பட்டுள்ளதாதலாலும், 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்கச் சட்டத்தின்கீழ் மீளப்பதிவு செய்யப்படுவதற்கு விண்ணப்பஞ்செய்துள்ளதாதலாலும் :

அத்துடன் சொல்லப்பட்ட கழகமானது எந்தப் பல்வேறுபட்ட குறிக்கோள்களுக்காகவும், கருமங்களுக்காகவும் தாபிக்கப்பட்டதோ அந்தப் பல்வேறு குறிக்கோள்களையும் கருமங்களையும் இதுவரை வெற்றிகரமாக நிறைவேற்றியும், கொண்டுநடாத்தியும் வந்துள்ளதாலும், அது கூட்டிணைக்கப்பட விண்ணப்பித்துள்ளதாதலாலும், அத்தகைய விண்ணப்பத்தை அனுமதித்தல் பொது மக்கள் நன்மைக்கானதாகவிருக்குமாதலாலும் ;

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :

சுருக்கப் பெயர்.

**1**. இச்சட்டம், 2011 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க, இலங்கை பொருளியற் கழகம் (கூட்டிணைத்தல்) சட்டம் என எடுத்துக் காட்டப்படலாம்.

இலங்கை பொருளியற் கழகத்தைக் கூட்டிணைத்தல்.

**2**. இச்சட்டம், தொடங்கும் திகதியிலிருந்தும், அதன்பின்னரும் (இதனகத்துப்பின்னர் “கழகம்” எனக் குறிப்பீடுசெய்யப்படும்) ‘‘இலங்கை பொருளியற் கழகத்தின்’’ தற்போதைய உறுப்பினர்களாக உள்ளவர்களும், இத்தால் அமைத்துருவாக்கப்படும் கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்களாக இனிமேல் சேர்த்துக் கொள்ளப்படுபவர்களுமான அத்தகையோரான அத்தனையாட்களும் (இதனகத்துப்பின்னர் “கூட்டுத்தாபனம்” எனக் குறிப்பீடுசெய்யப்படும்) “இலங்கை பொருளியற் கழகம்” என்ற பெயரின்கீழும் மகுடத்தின்கீழும் இடையறாவழியுரிமை கொண்ட ஒரு கூட்டிணைக்கப்பட்ட குழுவாகவிருத்தல் வேண்டும்;

2-PL 004989 - 990 (2010/07)

அத்துடன் அது அப்பெயர்கொண்டு வழக்குத் தொடுக்கலா மென்பதுடன் அதற்கெதிராக வழக்குத்தொடுக்கவும்படலாம் ; பொது இலச்சினையொன்றை வைத்திருக்கவும், பயன்படுத்தவும் விரும்பியாங்கு அதை மாற்றவும் அது முழுத் தத்துவமும் அதிகாரமும் கொண்டதாயிருத்தலும் வேண்டும்.

கூட்டுத்தாபனத்தின் பொதுக் குறிக்கோள்கள்.

**3.** கூட்டுத்தாபனம் அமைத்துருவாக்கப்படுவதற்கான பொதுக் குறிக்கோள்கள் பின்வருவனவாதல் வேண்டுமென இத்தால் வெளிப்படுத்தப்படுகின்றது :-

(அ) இலங்கையிலும், இலங்கைக்கு வெளியேயும் பொருளியல் என்ற துறையில் கற்கைகளைப் பொறுப் பேற்றலும், மேம்படுத்துதலும், வசதிப்படுத்துதலும் ;

(ஆ) பொருளியல் என்ற துறையில் ஆராய்ச்சியை ஒழுங்குபடுத்துதலும் மேம்படுத்துதலும், அரசாங்க, தனியார் மற்றும் சர்வதேச முகவர் நிலையங்கள் அல்லது நிறுவனங்கள் என்பவற்றிலிருந்து ஒப்பந்தத்தின்மீது கற்கைகளையும் ஆராய்ச்சிக் கருத்திட்டங்களையும் பொறுப்பேற்றலும் ;

(இ) பொருளியல் என்ற துறையில் போதனை மற்றும் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களைத் திட்டமிடுதலும், ஒழுங்குபடுத்துதலும் ;

(ஈ) பொருளியலுக்கு இயைபான பாடங்களில் அறிவையும் விழிப்புணர்ச்சியையும் மேம்படுத்தும் கருத்துடன் ஆராய்ச்சி முறைமையியலில் மாணவர்களுக்கும் ஏனையோருக்கும் பயிற்சியளித்தல் ;

(உ) பயனுள்ள சமூக - பொருளாதாரக் கொள்கைகளை வகுத்தமைத்தலில் உதவுதல் ;

(ஊ) பொருளாதார மற்றும் சமூக அபிவிருத்தி தொடர்பிலான பிரச்சினைகள் பற்றிய அறிக்கைகளைத் தயாரித்தலும் சமர்ப்பித்தலும் அல்லது பொருளாதார அபிவிருத்தி தொடர்பான கற்கைகள் பற்றிய அறிக்கைகளைத் தயாரித்தலும் ;

(எ) இலங்கையிலும் இலங்கைக்கு வெளியேயும் உள்ள ஒத்த கழகங்களுடன் புரிந்துணர்வையும், ஒத்துழைப்பையும், நற்புறவையும் மேம்படுத்துதல் ; அத்துடன்

(ஏ) சர்வதேசத் துறையிலும், இன்னமும் குறிப்பாக இலங்கையிலும், பொருளாதார மற்றும் சமூக அபிவிருத்தி பற்றிய அத்தகைய ஆய்வுகளையும் கற்கைகளையும் அதன் சொந்தத் தூண்டுதலின் பேரில் அல்லது உள்நாட்டு அல்லது வெளிநாட்டுக் கழகங்களின் ஒத்தாசையுடன் பொறுப்பேற்றலும், மேம்படுத்துதலும், நடாத்துதலும்.

கூட்டுத்தாபனத்தின் பொதுத் தத்துவங்கள்.

**4**. இச்சட்டத்தினதும் வேறேதேனும் எழுத்திலான சட்டத்தினதும் ஏற்பாடுகளுக்கமைய, கூட்டுத்தாபனம் பின்வரும் தத்துவங்களுட்பட, கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை அல்லது அவற்றுள் ஏதேனுமொன்றை மேம்படுத்துவதற்கு அல்லது முன்னெடுத்துச் செல்வதற்கு அவசியமானவாறான அல்லது விரும்பத்தக்கவாறான அத்தகைய எல்லாச் செயல்களையும் கருமங்களையும் செய்வதற்கும், புரிவதற்கும், நிறைவேற்றுவதற்கும் தத்துவமுடையதாதல் வேண்டும் :-

(அ) நிதிகளைத் திரட்டுவதற்கும், காசாக அல்லது பொருளாக மானியக்கொடைகளை, கொடைகளை அல்லது நன்கொடைகளை பெறுவதற்கும் ;

(ஆ) ஏதேனும் அசைவுள்ள அல்லது அசைவற்ற ஆதனத்தை எத்தகையதுமான எம்முறையிலும் கொள்ளுவதற்கும், வைத்திருப்பதற்கும், குத்தகைக்கு அல்லது வாடகைக்கு எடுப்பதற்கும் அல்லது கொடுப்பதற்கும், வாடகைக்கு விடுவதற்கும், விற்பதற்கும் அல்லது வேறுவகையாகக் கையுதிர்ப்பதற்கும் மற்றும் கூட்டுத்தாபனத்தின் தொழிலுக்கு அவசியமான அல்லது வசதியான எவையேனும் கட்டிடங்களை அல் லது கட்டுவேலைகளை நிர்மாணிப்பதற்கும், பேணுவதற்கும், மாற்றுவதற்கும்;

(இ) நாணயமாற்றுண்டியல்கள், காசோலைகள், வாக்குறுதிப்பத்திரங்கள் மற்றும் ஏனைய கைமாற்றத்தகு சாதனங்கள் என்பவற்றை ஆக்குவதற்கும், வரைவதற்கும், ஏற்றுக்கொள் வதற்கும், கழிப்பனவு செய்வதற்கும், புறக் குறிப்பிடுவதற்கும், பேச்சு வார்த்தைமூலம் பெறுவதற்கும், வாங்குவதற்கும், விற்பதற்கும், வழங்குவதற்கும், வங்கிக்கணக்குகளைத் திறப்பதற்கும், தொழிற்படுத்துவதற்கும், மூடிவிடுவதற்கும், பிணைப்பொறுப்புடனோ பிணைப்பொறுப்பின்றியோ பணம் கடன்பெறு வதற்கும் அல்லது திரட்டுவதற்கும் ;

(ஈ) கூட்டுத்தாபனத்தின் நோக்கங்களுக்காக உடனடி யாகத் தேவைப்படாத எவையேனும் நிதிகளை முகாமைப்பேரவை தீர்மானிக்கக்கூடியவாறான அத்தகைய முறையில் குறிப்பீடுசெய்வதற்கும் ;

(உ) இக்குறிக்கோள்களைச் செயற்படுத்துவதற்காக எவரேனுமாளுடன் அல்லது ஆட்கள் குழுவுடன் உடன் படிக்கைகளை அல்லது ஒப்பந்தங்களைச் செய்து கொள்வதற்கும் ;

(ஊ) வெவ்வேறு வகுதியினவான உறுப்பாண்மை களைப் பதிவுசெய்தல் தொடர்பில் செலுத்தப்பட வேண்டிய கட்டணங்களைத் தீர்மானிப்பதற் கும் ; அத்துடன்

(எ) கூட்டுத்தாபனத்தின் அலுவலர்களையும், சேவை யாளர்களையும் நியமிப்பதற்கும், தொழிலுக் கமர்த்துவதற்கும், பதவிவிலக்குவதற்கும் அல்லது அவர்களின் சேவைகளை முடிவுறுத்து வதற்கும், கூட்டுத்தாபனத்தினால் தீர்மானிக்கப் படக்கூடியவாறான அத்தகைய சம்பளங்களை யும், படிகளையும், பணிக்கொடைகளையும் அவர்களுக்கு செலுத்துவதற்கும் ;

கூட்டுத்தாபனத்தின் அலுவல்களை முகாமை செய்தல்.

**5.** (1) கூட்டுத்தாபனத்தின் முகாமையும், கட்டுப்பாடும், நிருவாகமும் இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கும் 6 ஆம் பிரிவின்கீழ் ஆக்கப்படக்கூடிய ஏதேனும் விதிக்கும் அமைய, (இதனகத்துப் பின்னர் "பேரவை" எனக் குறிப்பீடுசெய்யப்படும்) முகாமைப் பேரவைக்கு உரித்தாக்கப்படுதல் வேண்டும்.

(2) கூட்டுத்தாபனத்தின் முதலாவது பேரவையானது, இச்சட்டம் தொடங்கும் திகதிக்கு நேர்முந்திய நாளன்று பதவிவகிக்கின்ற கழகத்தின் உறுப்பினர்களைக் கொண்டிருத்தல் வேண்டும்.

கூட்டுத்தாபனத்தின் விதிகள்.

**6.** (1) ஏதேனும் பொதுக்கூட்டத்திலும், சமுகமாயிருந்து வாக்களிக்கும் உறுப்பினர்களின் மூன்றிலிரண்டு பங்கினருக்குக் குறையாதோரின் வாக்குப் பெரும்பான்மைகொண்டும் பின்வரும் கருமங்கள் எல்லாவற்றுக்கும் அல்லது அவற்றில் எவற்றுக்கும் இச்சட்டத்தின் அல்லது வேறேதும் எழுத்திலான சட்டத்தின் ஏற்பாடுகளுடன் ஒவ்வாதனவாகவிராத விதிகளை ஆக்குதல் கூட்டுத்தாபனத்திற்குச் சட்டமுறையானதாதல் வேண்டும் :-

(அ) உறுப்பாண்மையின் வகுப்பாக்கமும், ஒவ்வொரு வகுப்பினருமான உறுப்பினர்களினாற் செலுத்தப் படற்பாலனவான கட்டணங்களும், உறுப்பினர்களைச் சேர்த்துக்கொள்ளுதலும், உறுப்பினர் விலகுதலும் அல்லது அவர்களை விலக்குவதும் அல்லது அவர்கள் பதவிநீங்குதலும், உறுப்பினர்கள் பற்றிய இடாப்பைப் பேணுதலும் ;

(ஆ) பேரவையின் பதவிதாங்குநர்களைத் தேர்ந்தெடுத்தல், அல்லது பதவிதாங்குநர்கள் தமது பதவியை வறிதாக்குதல் அல்லது பதவியிலிருந்து அகற்றப்படுதல் மற்றும் அவர்களின் தத்துவங்களும், கடமைகளும், பணிகளும் ;

(இ) கூட்டுத்தாபனத்தின் பல்வேறு அலுவலர்கள், முகவர்கள் அத்துடன் சேவையாளர்கள் என்போரை நியமித்தலும், அவர்களின் தத்துவங்களும், கடமைகளும், பணிகளும், நியதிநிபந்தனைகளும் ;

(ஈ) பேரவையினதும், கூட்டுத்தாபனத்தினதும், அதன் ஏதேனும் உபகுழுவினதும் கூட்டங்களைக் கூட்டுவதிலும், நடாத்துவதிலும் பின்பற்றப்படவேண்டிய நடவடிக்கைமுறையும் அதற்கான கூட்டநடப்பெண் உட்பட மற்றும் அதில் அலுவல்களை நடாத்துதலும் ;

(உ) பேரவையினதும் கூட்டுத்தாபனத்தினதும், உறுப்பினர்களுக்கான தகைமையும், தகைமையீனமும் ; அத்துடன்

(ஊ) கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை எய்துவதற்காக கூட்டுத்தாபனத்தின் ஆதனத்தை நிருவகித்தலும் முகாமைசெய்தலும்.

(2) கூட்டுத்தாபனத்தால் ஆக்கப்படும் விதிகள், அதேபோன்ற கூட்டத்திலும் (1) ஆம் உட்பிரிவின்கீழ் ஆக்கப்படும் விதியென்றாற்போன்று அதேமுறையிலும் திருத்தப்படலாம், மாற்றப்படலாம், அதற்கெதுவும் சேர்க்கப்படலாம் அல்லது அது இல்லாதொழிக்கப்படலாம்.

(3) கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்கள் எல்லா நேரங்களிலும் இப்பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட கூட்டுத்தாபன விதிகளுக்கு அமைந்தோராதல் வேண்டும்.

*கழகத்தின் ஆதனங்கள் ஆதியனவற்றைக் கூட்டுத்தாபனத்துக்கு உரித்தாக்கல்.*

**7.** (1) இச்சட்டம் தொடங்கும் திகதியிலிருந்து –

(அ) கழகத்தின் எல்லா அசைவுள்ள அல்லது அசைவற்ற ஆதனமும் ;

(ஆ) கழகத்தின் எல்லா உரிமைகளும், தத்துவங்களும், சிறப்புரிமைகளும், அக்கறைகளும் மற்றும் கழகத்தின் எல்லாப் பொறுப்புக்களும் ;

(இ) கழகத்தின் எல்லாப் புத்தகங்களும், கணக்குகளும், ஆவணங்களும்,

கூட்டுத்தாபனத்துக்கு முழுமையாக உரித்தாதல் வேண்டும்.

(2) இச்சட்டம் தொடங்கும் திகதியிலிருந்தும், (1) ஆம் உட்பிரிவின் பொதுமைக்குப் பங்கமின்றியும் –

(அ) கழகத்துக்கு வருமதியாகவுள்ள எல்லாத் தனிசுகளும் செலுத்தப்படற்பாலனவான ஒப்பப்பணங்களும் கட்டணங்களும் கூட்டுத்தாபனத்துக்குச் செலுத்தப் படுதல் வேண்டும் ;

(ஆ) இச்சட்டம் தொடங்குவதற்கு நேர்முந்திய நாளன்று கழகத்துக்குள்ள எல்லாப் பொறுப்புக்களும் கூட்டுத் தாபனத்தின் பொறுப்புக்களாகக் கருதப்படுதல் வேண்டும்;

(இ) இச்சட்டம் தொடங்குவதற்கு நேர்முந்திய நாளன்று கழகத்தின் எல்லா அலுவலர்களும் சேவையாளர் களும் கூட்டுத்தாபனத்தின் அலுவலர்களாகவும் சேவையாளர்களாகவும் கருதப்படுதல் வேண்டும் ;

(ஈ) கழகத்தின் நோக்கங்களுக்காகச் செய்துகொள்ளப்பட்ட வையும், இச்சட்டம் தொடங்கும் திகதிக்கு நேர்முந்திய நாளன்று உள்ளவையுமான எல்லா ஒப்பந்தங்களும், உடன்படிக்கைகளும் கூட்டுத்தாபனத்தினால் செய்து கொள்ளப்பட்ட ஒப்பந்தங்களாகவும், உடன்படிக்கை களாகவும் கருதப்படுதல் வேண்டும் ;

(உ) கழகத்தினால் அல்லது கழகத்திற்கெதிராகத் தொடுக் கப்பட்டவையும் இச்சட்டம் தொடங்கும் திகதிக்கு நேர்முந்திய நாளன்று முடிவுறாதிருக்கின்றவையுமான எல்லா வழக்குகளும், சட்ட வழக்கு நடவடிக்கைகளும் கூட்டுத்தாபனத்தினால் அல்லது அதற்கெதிராகத் தொடுக்கப்பட்ட சட்ட வழக்கு நடவடிக்கைகளாகத் தொடர்ந்து நடாத்தப்பட்டு வலுவுக்கிடப்படுதல் வேண்டும்.

*கூட்டுத்தாபனத்தின் நிதியம்.*

**8.** *(1)* கூட்டுத்தாபனம், அதன் சொந்த நிதியத்தைக் கொண்டிருத்தல் வேண்டுமென்பதுடன், கொடைகள், இறுதிவிருப்பாவணக்கையளிப்புகள், மானியக்கொடைகள், நன்கொடைகள், காசாக அல்லது பொருளாக உதவுதொகைகள் அல்லது கட்டணங்கள் என்ற வகையாகப் பெறப்படும் எல்லாப் பணங்களையும் அது கொண்டிருத்தலும் வேண்டும்.

*(2)* பெறப்பட்ட எல்லாப் பணங்களும் பேரவையினால் முடிபு செய்யப்படக்கூடியவாறாகக் கூட்டுத்தாபனத்தின் பெயரில் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட வங்கிகளில் வைப்பிலிடப்படுதல் வேண்டுமென்பதுடன், கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை எய்துவதற்குப் பொருத்தமான ஏதேனும் முறையில் முதலீடு செய்யப்படுதலும் வேண்டும்.

*(3)* கூட்டுத்தாபனத்தின் தத்துவங்களையும், கடமைகளையும் பணிகளையும் பிரயோகிப்பதிலும், புரிவதிலும் நிறைவேற்றுவதிலும் கூட்டுத்தாபனத்தினால் உறப்பட்ட எல்லா செலவினமும் கூட்டுத்தாபனத்தின் நிதியத்திலிருந்து செலுத்தப்படுதல் வேண்டும்.

*கணக்குகளும் கணக்காய்வும்.*

**9.** *(1)* கூட்டுத்தாபனமானது, வருமானமும் செலவினமும், சொத்துக்களும், பொறுப்புக்களும் கூட்டுத்தாபனத்தின் வேறெல்லாக் கொடுக்கல் வாங்கல்களும் பற்றித் தகுந்தவாறான கணக்குகள் வைத்திருக்கப்படுவதனைச் செய்வித்தல் வேண்டும்.

*(2)* கூட்டுத்தாபனத்தின் கணக்குகள் பேரவையினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறாகத் தகைமைபெற்ற ஒரு கணக்காய்வாளரினால் கணக்காய்வு செய்யப்படுதல் வேண்டும்.

*(3)* இப்பிரிவில் "தகைமைபெற்ற கணக்காய்வாளர்" என்பது–

*(அ)* இலங்கையின் பட்டயக்கணக்காளர் நிறுவகத்தின் அல்லது சட்டத்தினால் தாபிக்கப்பட்ட வேறு ஏதேனும் நிறுவகத்தின் உறுப்பினரொருவராகவும் அத்தகைய நிறுவகத்தின் பேரவையினால் கணக்காளர் ஒருவராகத் தொழில்புரிவதற்காக வழங்கப்பட்ட சான்றிதழொன்றைக் கொண்டவராகவுமுள்ள தனியாள் ஒருவர் ; அல்லது

(ஆ) கணக்காளர் குழுமமொன்றில் வதியும் பங்காளர் ஒவ்வொருவரும் இலங்கைப் பட்டயக்கணக்காளர் நிறுவகத்தின் அல்லது சட்டத்தினால் தாபிக்கப்பட்ட வேறேதேனும் நிறுவகத்தின் உறுப்பினரொருவராக வும், அத்தகைய நிறுவகத்தின் பேரவையினால் கணக்காளர் ஒருவராகத் தொழில் புரிவதற்காக வழங்கப்பட்ட சான்றிதழொன்றைக் கொண்டவராகவு முள்ள கணக்காளர் குழுமம் ஒன்று,

எனப் பொருள்படும்.

*கழகத்தினால் செலுத்தப்படற் பாலனவும் கழகத்திற்குச் செலுத்தப்படற் பாலனவுமான தனிசுகள்.*

**10**. இச்சட்டம் தொடங்கும் திகதிக்கு நேர்முந்திய நாளன்று கழகத்துக்குரிய எல்லாத் தனிசுகளும் பொறுப்புக்களும் கூட்டுத்தாபனத்தால் செலுத்தப்படுதல் வேண்டுமென்பதுடன், அந்நாளன்று கழகத்திற்கு வருமதியான எல்லாத் தனிசுகளும் செலுத்தப்படற்பாலதான எல்லா ஒப்பப்பணங்களும் உதவு தொகைகளும் இச்சட்டத்தின் நோக்கங்களுக்காகக் கூட்டுத்தாப னத்திற்குச் செலுத்தப்படலும் வேண்டும்.

*கலைக்கப்படு வதன் மீது எஞ்சியுள்ள ஆதனம்.*

**11**. கூட்டுத்தாபனம் கலைக்கப்பட்டதன்மீது அதன் எல்லாத் தனிசுகளையும், பொறுப்புக்களையும் கொடுத்துத் தீர்த்ததன் பின்னர் எத்தகையதுமான ஏதேனும் ஆதனம் எஞ்சியிருப்பின், ஆதனம் கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்களிடையே பகிர்ந் தளிக்கப்படுதலாகாது. ஆனால், கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள் களையொத்த குறிக்கோள்களையுடையதும் அல்லது உடையன வும், அதன் அல்லது அவற்றின் உறுப்பினர்களிடையே ஏதேனும் வருமானத்தை அல்லது ஆதனத்தை பகிர்ந்தளிப்பதற்கு அதன் அல்லது அவற்றின் விதிகளினால் தடைசெய்யப்படுகின்றதும் அல்லது தடைசெய்யப்படுகின்றனவுமான வேறேதேனும் நிறு வனத்துக்கு அல்லது வேறெவையேனும் நிறுவனங்களுக்குக் கொடுக்கப்படுதல் அல்லது கைமாற்றப்படுதல் வேண்டும், கூட்டுத்தாபனம் கலைக்கப்படும் நேரத்தில் அல்லது அதற்கு நேர்முன்னர் அந்நிறுவனமானது அல்லது நிறுவனங்களா னவை பேரவையினால் தீர்மானிக்கப்படுதல் வேண்டும்.

*கூட்டுத்தாபனத்தின் இலச்சினை.*

**12.** கூட்டுத்தாபனத்தின் இலச்சினையானது செயலாளரினது அல்லது பேரவையால் முறையாக அதிகாரமளிக்கப்பட்டவாறாக பேரவை உறுப்பினர் ஒருவரினது பேரவையின் இன்னுமோர் உறுப்பினரினது முன்னிலையிலன்றி, எத்தன்மையினதுமான சாசனமெதிலும் பொறிக்கப்படுதலாகாதென்பதுடன் ; அவர்கள் தாங்கள் சமுகமாயிருந்ததற்கு அடையாளமாக அச்சாசனத்தில் தங்களது பெயர்களை எழுதி ஒப்பமிடுதல் வேண்டுமென்பதுடன், அவ்வாறு ஒப்பமிடுதலானது எவரேனும் ஆள் சாட்சியாக ஒப்ப மிடுவதிலிருந்து தனிவேறானதாதலும் வேண்டும்.

*உறுப்பினர்களின் பொறுப்பை வரையறுத்தல்.*

**13.** கூட்டுத்தாபனத்தின் உறுப்பினரெவரும் கூட்டுத்தாப னத்தின் தனிசுகளையும், பொறுப்புகளையும் கொடுத்துத்தீர்க்கும் நோக்கத்திற்காக அல்லது வேறேதேனும் நோக்கத்துக்காக, கூட்டுத்தாபனத்திற்கு அவரினாற் செலுத்தப்படற்பாலதான வருடாந்த ஒப்பப்பணத் தொகையை விஞ்சுகின்ற ஏதேனும் உதவுதொகையைச் செலுத்துவதற்கு ஆளாதலாகாது.

*குடியரசினதும் மறுபேரினதும் உரிமைகளைப் பேணுதல்.*

**14.** இச்சட்டத்தில் அடங்கியுள்ளது எதுவும், குடியரசின் உரிமைகளையேனும் அல்லது ஏதேனும் அரசியல் அல்லது கூட்டிணைக்கப்பட்ட குழுவினது உரிமைகளையேனும் பங்கப் படுத்துதலோ அல்லது பாதித்தலோ ஆகாது.

*ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.*

**15.** இச்சட்டத்தின் சிங்கள உரைக்கும், தமிழ் உரைக்குமிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

*பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387 : (வெளிநாடு) ரூபா 1,849 : ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், அரசாங்க தகவல் திணைக்களம், இல. 163, கிருலபனை மாவத்தை, பொல்ஹேன்கொடை, கொழும்பு 05 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்*